In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 163/2023 | Prosecution witness P.W.28 |
| Name: Malaichamy | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 16-09-2025.

**(A1 produced thorugh V.C. A3 to A9 are present.)**

முதல் விசாரணை :-

நான் தற்போது திண்டுக்கல் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பாக திண்டுக்கல் நகர் மேற்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது கடந்த 2023ம் வருடம் ஜூன் மாதம் 16ம் தேதி நான் ரோந்து பணியிலிருந்தபோது ரகசிய தகவலாளி கொடுத்த தகவலின்படி ஜூன் முதல் வாரத்திலிருந்து திண்டுக்கல் செல்லாண்டியம்மன்கோவில் தெரு, நாராயணபிள்ளை தோட்டம், சவுகத் அலி மகன் ஆசிக் முகமது என்ற அல் ஆசிக் என்பவர் திண்டுக்கல், வேடசந்தூர் தாலுகா, ஆர்.புதுக்கோட்டையைச் சேர்ந்த அப்துல் ரகீம் என்பவரது மகன் ஹர்சத் அகமது என்ற 18 வயது பூர்த்தியடையாத சிறுவனிடம் இயற்கைக்கு மாறான ஒரு பாலியல் செய்கை செய்தும் அவரை வன்புணர்ச்சிக்கு அழைக்கும் வீடியோ சமூக வலைதளங்களில் பரவி அது பொதுமக்களுக்கு அருவறுக்கத்தக்கதாக இருந்ததாக கூறி அவர் அந்த வீடியோவினை எனது மொபைல் போனுக்கு அனுப்பிவைத்தார். அந்த வீடியோவினை நான் பார்த்தபோது ஆசிக் அகமது என்ற அல் ஆசிக் என்பவர் அந்த சிறுவனிடம் தனது ஆனுறுப்பை காட்டி இயற்கைக்கு மாறான பாலியல் வன்புணர்ச்சிக்கு தூண்டியது தெரிய வந்தது. மேலும் அந்த சிறுவனை பற்றி விசாரிக்க அச்சிறுவன் திண்டுக்கல், வேடசந்தூர்

தாலுகா, கோ.ராமநாதபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வருகிறான் என தெரியவந்தது. மேலும் அவரது வயது பற்றி தலைமையாசிரியரிடம் விசாரிக்க அவரது பிறந்த தேதி 20.03.2007 என சான்று வழங்கினார். எனவே அச்சிறுவன் 16 வயது பூர்த்தியடையாததால் இச்சம்பவம் குறித்து சமூக வலைதளங்களில் பரவிய அவ்வீடியோவை பென்டிரைவில் பதிவிறக்கம் செய்து தனியறிக்கை தயார் செய்து திண்டுக்கல் நகர் மேற்கு காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த சார்பு ஆய்வாளர் முப்பிடாறி அவர்களிடம் நடவடிக்கை எடுக்க தனியறிக்கை மற்றும் பென்டிரைவை சமர்ப்பித்தேதன். பின்பு சார்பு ஆய்வாளர் அத்தனியறிக்கையை பெற்று 24.06.2023ம் தேதி மேற்கு காவல்நிலைய கு.எண்.261/2023 u/s 11(1) POCSO Act and 67(B) (a) of IT Act ஆக வழக்கு பதிவு செய்து காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தார். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். இவ்வழக்கு சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

1, 3 மற்றும் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–

சமூகவலைதளத்தில் யார் வெளியிட்டார்கள் என்பது எனக்குத் தெரியாது. என்னுடைய செல்போனிலிருந்து பதிவிறக்கம் செய்ததாக உள்ள நிலையில் என்னுடைய செல்போனை காவல்நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு பதிவு செய்யப்படுவதற்கு நான் சிறுவனின் வயது குறித்து விசாரணை செய்தேன் என்றால் சரிதான். 1வது எதிரியை தடுப்பு காவலில் வைப்பதற்காக உருவாக்கப்பட்ட வீடியோதான் மேற்படி வீடியோ என்றால் சரியல்ல. சமூக வலைதளங்களில் நான் எதுவுமே பதிவிறக்கம் செய்யவில்லை என்றும் இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

2, 4 மற்றும் 6 முதல் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை– 1,3 மற்றும்5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.09.16 18:05:06 +0530

Principal District Judge,
Dindigul.